Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BODINAYAKANUR

**C.C No. 228 / 2022**

Depositions of பீர்ஒலி - ..witness for ...Prosecution Side Witness 1 (LW- 1)

| | |
|---|---|
| Name | - பீர்ஒலி (PW- 1 ) |
| Father's and Husband's name | - மைதீன்பிட்சை |
| Village | - |
| Taluk | - |
| Caste | - |
| Calling | - |
| Religion | - |
| Age | - |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02.06.2023.

**சாட்சி அழைக்கப்பட்டு திருமதி . G. அபிநயா, கிரேட் 3 பெஞ்ச் கிளர்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**( எதிரி ஆஜர். )**

**முதல் விசாரணை-**

நான் போடியில் குடியிருந்து, விவசாயம் செய்து வருகிறேன். எனது மனைவிக்கு ஆஜர் எதிரியுடன் தவறான தொடர்பு இருந்தது. நான் பலமுறை இதுகுறித்து எதிரியை அழைத்து கண்டித்தேன். மகளிர் காவல் நிலையத்திலும் புகார் கொடுத்து போலீசார் எதிரியை அழைத்து விசாரித்து எச்சரித்து அனுப்பி வைத்தனர். சம்பவம் நடந்த தினம் நான் எனது மனைவியிடம் எதிரி வாங்கி கொடுத்த செல்போனை உடைத்து விட்டேன். ஆஜர் எதிரி எனது மனைவிக்கு வேறு செல்போன் வாங்கிகொடுத்துள்ளார். எனக்கு தெரியாமல் எனது மனைவி ஆஜர் எதிரியுடன் பேசிக்கொண்டு இருந்துள்ளார். மேற்படி செல்போனில் எதிரியுடன் என் மனைவி பேசிக்கொண்டிருந்த விபரம் தெரிந்து 15.03.2021 ம் தேதி இரவு 7 மணியளவில் ராஜ்பவன் ஓட்டல் அருகில் எதிரியை பார்த்து கேட்டேன். நான் எதிரியிடம் ஏன்டா இப்படி செய்கிறாய், உனக்கும் குடும்பம் உள்ளது எனக்கும் குடும்பம் உள்ளது என்று கேட்டேன். எதிரி தாயோழி மகனே என்று அசிங்கமான வார்த்தையால் திட்டி அசிங்கமாக பேசினார். இப்படியே நீ செய்தால் உன்னை கொன்றுவிடுவேன் என்று எதிரி மிரட்டினார். அந்த இடத்தில் இருந்தவர்கள் மற்றும் எனது அப்பாவும் விலக்கிவிட்டனர். சம்பவம் நடந்த அன்று இரவு எனது மனைவியிடம் எதிரியை பற்றி பேசினேன். அதன்பின்பு எனது அண்ணனிடமும் அதுகுறித்து கூற வீட்டிலிருந்து சென்றுவிட்டேன். மீண்டும் வீட்டிற்கு வந்து பார்த்தபோது என் மனைவி வீட்டில் இல்லை, எங்கு சென்றார் என்று தெரியவில்லை. பின்பு காலை 6 மணிக்கு காவல்நிலையம் சென்றேன். அவர்கள் புகாரை எழுதி எடுத்துவருமாறு கூறியதால் புகாரை எழுதிக் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும்

புகார் நான் எழுதியதுதான். புகார் அதசாஆ. 1. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர் . எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.